[1982 மார்ச் 25

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, வியாசர்பாடியிலே அகதிகள் மொத்தம் 3,218 குடும்பங்களாகும். இதில் வீடு கேட்டு பெற தகுதியுள்ள குடும்பங்கள் 2,140 ஆகும். 1,078 குடும்பங்கள் மற்ற காரணங்களினாலும், வேறு இடங்களிலே வீட்டு கடன் வாங்கியவர்கள், அதனால் பெற தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இப்படி தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக தமிழக அரசு 6,000 ரூபாய் கடன் கொடுப்பதாக அறிகிறேன். விலைவாசி ஏறி இருக்கிற காரணத்தால் வீடு கட்ட வழங்கப்படுகிற கடனை உயர்த்திக் கொடுக்க பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, கட்டிட பொருள்களின் விலை ஏற்றத்தை முன்னிட்டு நகரப் பகுதிகளிலே 11,500 ரூபாயாகவும், கிராமப்புறங்களில் 8,000 ரூபாயாகவும் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து நல்ல பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடும் திட்டம்

*குறுகியகால வினா எண். 3—திரு. மு. அம்பிகாபதி, திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது, திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பல வழித்தடங்களில் பேருந்து விடப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படிப்பட்ட வழித்தடங்களில் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) கிராம மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் சாலைப் போக்குவரத்துத் தேவைகளை மதிப்பிடுவதில் உதவி செய்வதற்கும் பல்வேறு அரசுத் துறைகள் இணைந்து சாலைப் போக்குவரத்து ஆய்வு ஒன்றினை நடத்தியது. அந்த ஆய்வின் அடிப்படையில் முதல் நிலையில் 476 வழித்தடங்களைத் தொடங்குவதன் மூலம் 968 சிற்றூர்களிலுள்ள 18 இலட்சம் மக்கள் பயனடைவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில், 286 வழித்தடங்களில்

பேருந்துகளும், மினி பஸ்களும் விடப்பட்டுள்ளன. மீதமுள்ள 190 வழித்தடங்களிலும், இதைத் தவிர, நடத்தப்பட்ட விரிவான ஆய்வின்படி இரண்டாம் நிலையில் 426 புதிய வழித்தடங்களிலும் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் முதல் நிலையாக 476 வழித்தடங்களில் விட ஆலோசனை செய்யப்பட்டதில் 190 வழித்தடங்களில் விடப்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். 286 விடப்பட்டிருக்கிறது. அடுத்த கட்டமாக 426, 190 மீதம். கிட்டத்தட்ட ஒரு 600-க்கு மேற்பட்ட வழித்தடங்களிலே அரசாங்கம் பேருந்துகளை விடுவதிலே காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது. அரசாங்கமே இந்த வழித்தடங்களில் நிறைய பேருந்துகளை விடவேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிற நேரத்தில், மக்களுடைய வசதியைக்கருதி உடனடியாக பேருந்துகளை விட தனியார்கள் முன் வந்தால் அவர்களுக்கு அனுமதி அளித்து, அரசாங்கம் பேருந்துகள் விடுகிற காலத்திலே

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியத்திலே பேசுவது போல பேசக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, எனவே அரசாங்கம் இப்படிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடத்தியபடி ஏறத்தாழ 616 வழித்தடங்களிலே இன்னும் பேருந்துகள் விடவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே ஆயிரக்கணக்கான வழித்தடங்களில் நாங்கள் பேருந்துகளை விட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் மக்களுக்காக உடனடியாகப்பேருந்து கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறது. அந்த வகையிலே பேருந்துகள் அரசாங்கம் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை ஆய்ந்து அதற்கு மேலே வேறு வகையான நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்கும்.

(முற்பகல் 10-10).

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டம் கிராம மக்களின் அடிப்படைத்

தேவைகளை நிறைவு செய்வது போல், போக்குவரத்து வசதி இல்லாத கிராமமே இல்லை என்று சொல்கிற அளவில் தமிழகம் தன்னிறைவு பெற தனித் திட்டத்தை வகுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் போல்தான் செய்ய வேண்டுமென்ற வேகத்திலே ஆண்டு தோறும் 1,500 பேருந்துகள், 2,000 பேருந்துகள் என்று இந்த அரசாங்கம் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகத் துவக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம் அதை இன்னும் கூட அதிகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தான் நான் ஏற்கனவே சொன்ன பதிலிலேயே தெரிவித்தேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல வழித் தடங்களில் இன்னும் விடவில்லை என்று ஒப்புக் கொண்டார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு யூனியனுக்கு 2 பஸ்கள் விடுவதாகச் சொல்லப்பட்டதே அது என்னவாயிற்று ? மேலும், கும்பகோணம் பெண்கள் கல்லூரிக்குத் தனியாக பஸ் விடாமல் இருப்பதால், அங்கே கல்லூரிக்குப் போகக் கூடிய பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களே அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் ஒப்புக் கொண்டதற்காக நன்றியைச் சொன்னார்கள். அதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இதற்கு முன்னாலே தேக்கி வைக்கப்பட்டதிலே நாம் ஒரு பகுதியை விட்டிருக்கிறோம். எனவே, முன்னாலே இருந்து தொடர்ந்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றி சொல்லியாக வேண்டும். எனவே, நாங்கள் விரைவாகச் செய்கிறோம் என்பதை மட்டும் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மினி பஸ் விடப்படுவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். பெண்கள் கல்லூரிக்குப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக, தனியாக எழுதிக் கொடுப்பார்களானால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 476 வழித்தடங்களுக்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சேரன் போக்குவரத்துக் கழகம் கோவை மாவட்டத்தில் ஈரோட்டிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வருகின்ற நேரத்தில், இடைப்பட்ட பகுதியாக இருக்கக் கூடிய அவினாசியியல் அந்த பஸ்கள் நிறுத்து

1982 மார்ச் 25]

வதில்லை. அங்கு வருகின்ற காலத்திலேயே முழுமையாக நிரப் பப்பட்டு வருகின்றன. எனவே, அவினாசியில் இருக்கக்கூடிய கிராம மக்கள் பயன்பெற முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத் தால், அவினாசியை மையமாக வைத்து கிராமப் புறத்திற்கும் கோவைக்கும் செல்லக் கூடிய முறையிலே சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கக்கூடிய பஸ்களை அதிகப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அனுதாபத்தோடு அந்தக் கோரிக்கை கவனிக்கப் படும்.

திரு. மு. அம்பிகாபதி : இரண்டாவது கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்விக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது. இரண்டா வது கேள்விக்கு கொடுக்க வேண்டுமென்று இல்லை. நீங்கள் தயவு செய்து அதை விடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : எப்பொழுதும் இரண்டு துணைக் கேள்வி அனுமதிக்கப்படும். இப்பொழுது ஏன் கொடுக்க வில்லை ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமில்லை. கொடுக்கவில்லை. அவ்வளவுதான்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]